CFM/4/21

# ஏற்பு வலி

## TETANUS

## ஏற்புவலி என்றால் என்ன?

- இது குளொஸ்திரியம் ரெற்றனி(Clostridium tetani) எனப்படுகின்ற ஒரு வகை பக்ரீரியாவினால் சுரக்கப்படும், நச்சுப்பதார்த்தம் மைய நரம்புத் தொகுதியை பாதிப்பதால் ஏற்படும் ஓர் உயிர்க்கொல்லி நோயாகும்.

- இவ்வகை பக்ரீரியா பொதுவாக குதிரை மற்றும் விலங்குகளின் மலத்திலும், மண்ணிலும் காணப்படும். (வித்திகளாக)

## இந்த பக்ரீரியா மனித உடலை எவ்வாறு அடைகிறது?

- ஆழமான குத்துக்காயங்கள் (ஈர்க்குகள், துருப்பிடித்த கம்பிகள், விலங்குகளின் நகங்கள், பற்கள் போன்றவற்றால் ஏற்படும் காயங்கள்) நெருப்பு சூட்டு காயங்கள் போன்றவற்றினூடாக குளொஸ்திரியம் உடலை அடைகின்றது.

- இந்த குளொஸ்திரிய வித்திகள் ஒட்சிசன் ($O_2$) செறிவு குறைவாக இருக்கும்போதே குளொஸ்திரியத்தினை தோற்றுவிக்கும். ஆழமான காயங்கள் இதற்கு ஏதுவாக இருப்பதால் இவை குளொஸ்திரியத்தினை தோற்றுவிக்கும்.

- காயத்தினை அடையும் குளொஸ்திரியம் மனித உடலினுள் செல்லாது அவ்விடத்திலேயே பெருக்கமடைந்து நச்சுப்பதார்தங்களை சுரக்கும் (Tetanospasmin).

- சுரக்கப்பட்ட நச்சுப்பதார்த்தங்கள் நரம்பு முடிவிடங்களினுடாக மையநரம்புத் தொகுதியினை சென்றடைந்து ஏற்புவலியையும் தசைப்பிடிப்பையும் ஏற்படுத்தும்.

வெளியீடு: சமுதாய மருத்துவ துறை,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(2)

## நோயறிகுறிகள் யாவை?

- இதன் நோயரும்பு காலம் 2-5 நாளிலிருந்து வாரங்கள் வரை மாறுபடலாம்.
- முதலில் காயமுள்ள இடத்தில் தசைப்பிடிப்பு ஏற்படும். பின்னர் தாடைத் தசைப்பிடிப்பு (Lockjaw) ஏற்படும். அதனைத்தொடர்ந்து முழு உடலிலும் தசைப்பிடிப்பு ஏற்படும்.
- காயமுள்ள இடத்தில் வலி ஏற்படும்.
- சுவாசம் ,விழுங்குதல் போன்ற செயற்பாடுகள் கடினமானதாக இருக்கும்.
- குளிர் காய்ச்சல் ஏற்படும்.
- இதயத்துடிப்பு அதிகரிக்கும்.
- பொதுவாக இறப்பு சுவாசம் தடைப்படுவதாலேயே ஏற்படும்.

**குறிப்பு:**

- *தடுப்பூசி போடுவதே ஏற்புவலி வராமல் தடுக்கக்கூடிய சிறந்தவழி.*
- *ஏற்புவலிக்கான தடுப்புமருந்தினை வாயினால் உட்கொள்ள முடியாது*

## ஏற்புவலி வராமல் தடுப்பது எப்படி?

- ஏற்கனவே கூறிய சந்தர்ப்பங்களிலோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ உடலில் காயங்கள் ஏற்படும் போது அவற்றை நீர், சவர்க்காரம் கொண்டு சுத்தமாக கழுவுதல் வேண்டும்.
- வைத்தியசாலையில் முழுமையான ஏற்புவலி தடுப்பூசியினை போடுதல் வேண்டும். (நீங்கள் ஏற்கனவே போடாதிருந்தால்)
- சட்ட விரோத கருக்கலைப்பின் போது கம்பிகள் பாவிப்பதால் ஏற்புவலி ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே இம்முறையை தவிர்த்தல் வேண்டும்.
- பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்புவலி ஏற்படாது இருக்க தாய்மார் ஏற்பூசி ஏற்றுதல் அவசியம்.

# தடுப்பூசி போடவேண்டிய சந்தர்ப்பங்கள்

- ஆழமான குத்து, வெட்டுக் காயங்கள் ஏற்படும்போது.
- காயங்களின்மீது மண் மற்றும் அழுக்குகள் தொடுகையுறும்போது.
- உங்களுக்கு காயம் ஏற்படும்போது வயது 10 இற்கு குறைவாக இருக்கும் ஆயின், நீங்கள் பிறந்த 2வது, 4வது, 6வது, 18வது, 60வது மாதங்களில் முக்கூட்டு **(DPT)**, இருகூட்டு **(DT)** தடுப்பு மருந்துகள் ஒழுங்காகப் பெற்றிருப்பின் தடுப்பூசி அவசியமற்றது.
- உங்களுக்கு வயது **10** இற்கு அதிகமாக இருக்கும் போது காயம் ஏற்பட்டால், நீங்கள் **10-15** வயதில் தடுப்பூசி **(aTd)** போடாதுவிட்டிருந்தால் ஏற்பூசி **(Tetanus Toxoid)** முழுமையாக போடுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | **6 கிழமையின்** | | **6 மாதங்களின்** | |
| முதலாவது ஊசி | ⟶ | இரண்டாவது ஊசி | ⟶ | மூன்றாவது ஊசி |
| | **பின்** | | **பின்** | |

- மூன்று ஊசிகளும் ஒழுங்காகப் போடப்பட்ட பின் மீண்டும் காயம் ஏற்பட்டால்,
  - *5 வருடங்களுக்கு ஏற்பூசி அவசியமற்றது.*
  - *ஊசி போட்டு 5–10 வருடங்களானால் ஒரு ஏற்பூசி அவசியம் (Booster dose)*
  - *ஊசி போட்டு 10 வருடங்களுக்கு மேல் ஆயின் முழுமையான தடுப்பூசிகள் **(3)** இடுதல் வேண்டும்.*
- பெண்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது அவர்களுக்கும், பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் ஏற்புவலி வராமலிருக்க ஏற்பூசி போடுதல் வேண்டும்.

* **முதலாவது ஊசி ---- முதலாவது மகப்பேற்றின் போது (12 வாரத்திற்கு பிறகு)**
* **இரண்டாவது ஊசி ----- முதலாவது ஊசி போட்டதிலிருந்து 6-8 வாரத்திற்கு பிறகு**
* **மூன்றாவது ஊசி, நான்காவது ஊசி, ஐந்தாவது ஊசி ----- அடுத்துவரும் ஒவ்வொரு மகப்பேற்றின் போதும்**

## கவனிக்க வேண்டியவை :-

- எந்த தடுப்பூசி போட்டாலும் அவற்றை முற்று முழுதாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

- நீங்கள் பெற்றுக்கொண்ட தடுப்பூசியினைப் பற்றிய தகவல்களை குறித்து வைத்திருக்க வேண்டும். (காலம்)

- தடுப்பூசிகள் வைத்தியரின் ஆலோசனைப்படி இடுதல் வேண்டும்.

- நீங்கள் தடுப்பூசியை போடும் போது உங்களுக்கு ஏதாவது ஒவ்வாமைகள் (Allergy) இருப்பின் அதனை வைத்தியரிடம் தெரிவிக்க வேண்டும்.

- ஊசி போட்டதைத் தொடர்ந்து ஏதாவது நோயறிகுறிகள் ஏற்படுமாயின் வைத்தியரை நாடவும்.

அனுசரணை:

FORUT
VAVUNIYA



Designed By: VASTEC, Vavuniya.